**பனை அபிவிருத்திச் சபை – 2016**

---

பனை அபிவிருத்தி சபையின் (“சபை”) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிகூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 46 ஆம் இலக்க தென்னை அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின 44 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வைத் திட்டமிட்டு மேற்கொள்வதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்களிற்கு ஆதாரமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

பனை அபிவிருத்தி சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு விடயங்களிற்கும் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு ரூபா 575,166 பெறுமதியான கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய பின்வரும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | கிடைக்கப்பெறாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| வாடகை கொடுப்பனவு | 372,238 | வாடகைக்கு பெறப்பட்ட மாவட்ட அலுவலகம் மற்றும் கற்பக விற்பனை நிலையங்களுக்கான வாடகை மதிப்பீட்டு அறிக்கைகள் |
| எரிபொருள் செலவினம் | 202,928 | உத்தியோகத்தர்களின் கையொப்பம் மற்றும் பிரயாணம் செய்த நோக்கம் |

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐந்து மூன்றாம் தரப்பினர்க்கு வழங்கப்பட்ட ரூபா 1,444,866 முற்பணத்தை அறவிடுவதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக 2016 திசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊழியர் நலன்புரி சங்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், வன்னி பிபிஎஸ்சிஎஸ் மற்றும் கைவினை பயிற்சி ஏற்பாடு என்பவற்றுக்கு செலுத்த வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 5,068,804 தெகையான மீதிகள் ஆறு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்ப்பனவு செய்யப்படாமல் அல்லது இவ் விடயம் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்படாமல் செலுத்த வேண்டிய மீதிகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| **(அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம்** | |
| 14(3) ஆம் பிரிவு | 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளிற்கான சபையின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | |
| (i) நிதிப்பிரமாணம் 272(3) | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அவை தொடர்புபட்ட மாதத்தின் இறுதியிலிருந்து ஆறு கிழமைகளிற்கு பிந்தாமல் மாதாந்தம் கணக்காய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 445 | மாவட்ட அலுவலகங்கள் மற்றும் விற்பனை நிலையங்களால் இருப்பு பதிவேடு முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 715 | சபைக்கு சொந்தமான விற்பனை நிலையங்களால் முறையான களஞ்சிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நிதிப்பிரமாணம் 751(1) | - இருப்புப் புத்தகங்களில் பொருட்களின் கொள்வனவுகளை பதிதல் மற்றும் பேணுதல் தொடர்பில் பல்வேறு குறைபாடுகள் அவதானிக்கப்படடன.<br>- பெறுவனவுகள் வழங்கல்கள் மற்றும் முன்கொண்டுவரப்பட்ட மீதி என்பவற்றை காட்டும் வகையில் பொருட்பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (v) நிதிப்பிரமாணம் 1010(ஆ) | சபையால் வாகனங்களிற்கு பௌதீகரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

(இ) **2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை**

| | |
|---|---|
| 4.2.5 ஆம் பந்தி | சபையானது அதன் தொழிற்படு மூலதனத்தின் ஆக்கபூர்வமான முகாமைத்துவத்திற்கான நிறுவக முறைமைகளைக் கொண்டிருக்கவில்லை. பின்வரும் கூற்றுக்கள் சபைக் கூட்டங்களில் மாதாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.<br><br>- கடன்பட்டோரினதும் கடன் கொடுத்தோரினதும் கால பகுப்பாய்வு,<br>- இருப்புக்களின் வயதுப் பகுப்பாய்வு<br>- பழைய, மெதுவாக அசையும் மற்றும் வழக்கிழந்த இருப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்களை இனங்காணும் கூற்று. |

## 3. நிதிசார் மீளாய்வு

## 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாடு அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 125,783,577 பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 128,597,258 பற்றாக்குறையொன்றினை விளைவித்திருந்தமையால் சபையின் நிதி விளைவுகளில் ரூபா 2,813,681 ஆன மேலுமொரு வீழ்ச்சியினை சுட்டிக்காட்டுகின்றது. கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் காரணமாக மீளாய்வாண்டிற்கான வருமானத்திற்கெதிராக ரூபா 130,574,756 ஆன ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினம் மற்றும் பயிற்சி செலவினம் என்பவற்றினை தாக்கீடு செய்தமையே இந்த பின்னடைவிற்கான பிரதான காரணமாக கொள்ளப்பட்டுள்ளது.

மீளாய்வாண்டின் போது சபையின் செயற்பாடுகள் ரூபா 128.59 மில்லியன் பற்றாக்குறையை விளைவித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது நாட்டிற்கான சபையின் பங்களிப்பு கணக்குகட்கு கொண்டுவரப்பட்ட பின்னரான ஆளுக்குரிய வேதனாதிகள்இ அரசுக்கு செலுத்திய வரிகள்இ வீதவரிகள் மற்றும் தேய்மானங்கள் உள்ளடங்களாக ரூபா 215.15 மில்லியனாக இருந்தது. ஆகையால் மீளாய்வாண்டின் இறுதியில் பெறுமதி சேர்க்கை ரூபா 86.56 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டு மற்றும் கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் பெறுமதி சேர்க்கையானது நிகழாண்டின் இறுதியில் 15 சதவீதமாக அதிகரிப்பைக் காட்டியது.

## 3.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த செயற்பாட்டுச் செலவினம் ரூபா 120,080,365 ஆக இருந்த போதிலும் அதில் ஆளணி வேதனங்களிற்கான ரூபா 165,738,779 ஏற்பட்டிருந்ததுடன் மொத்த செலவினத்தினத்தின் 72 சதவீதத்தை இது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

நாட்டினது தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்ய கூடிய வகையிலும் சபையின் பிரதான நோக்கத்தை அடையத்தக்க வகையிலும் உற்பத்தி மட்டத்தை அதிகரித்தும் சந்தைக்கு புதிய பனைசார் உற்பத்திகளை அறிமுகப்படுத்தவும் நடப்பாண்டில் சபையானது பயனுறுதியானதும் உரிய முறையிலும் செயற்பாடுகளை எடுத்திருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டு திறமையீனங்கள்

#### 4.2.1 திக்கம் வடிசாலை செயற்திட்டத்தின் செயற்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 ஏப்ரல் 10 இல் வடமராட்சி பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க கொத்தணி மற்றும் சபை என்பவற்றுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம்இ பனை அபிவிருத்தி சபைக்கு சொந்தமாக்கப்பட்ட மிக பெறுமதிவாய்ந்த சொத்துக்கள் குத்தகை அடிப்படையில் பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தன.

இவ் விடயம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) குத்தகை உடன்படிக்கையின் 01 மற்றும் 02 ஆம் பந்தியின் பிரகாரம் 2008 மே இலிருந்து மாதாந்த உரிமைத்தொகை மற்றும் குத்தகை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையால் வழங்கப்பட்ட பெறுமதியான சொத்துக்களை கையேற்பதற்கு பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2016 பெப்ரவரி 25 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது பல சொத்துக்கள் உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிராததமையையும் சில சொத்துக்கள் சேதமடைந்திருந்தமையையும் வெளிப்படுத்தியது.

(ஆ) மீளாய்வாண்டில் திக்கம் வடிசாலை புனரமைப்பு செய்வதற்காக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 112.5 மில்லியன் சபையினால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 4.2.2 நட்டத்தில் இயங்கும் மாதிரிப் பண்ணைகள்

ஆறு மாதிரிப் பண்ணைகள் தொடர்ச்சியாக கடந்த 03 ஆண்டுகளாக நட்டத்தில் இயங்குகின்றதுடன் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 02 ஆண்டு காலப்பகுதியின் போது தொடர்ச்சியான நட்டங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மாதிரிப் பண்ணையின் பெயர் | ஆண்டுகளிற்கான நட்டங்கள் | | |
|---|---|---|---|
| | **2016** | **2015** | **2014** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| குடத்தனை | 276,556 | 688,821 | 545,045 |
| மாமுனை | 452,418 | 608,282 | 694,221 |
| நெடுந்தீவு | 56,828 | 60,000 | 61,620 |
| புளியங்குளம் | 2,283,204 | 2,383,310 | 1,771,618 |
| வீரவில | 3,078,144 | 2,302,275 | 1,415,480 |
| ஊற்றுப்புலம் | 98,203 | - | 98,203 |
| மொத்த நட்டம் | 6,245,353 | 6,042,688 | 4,586,187 |

மேலும் கிழ் குறிப்பிடப்பட்ட 137 ஏக்கர்கள் மொத்தப் பரப்புளவுடனான நான்கு மாதிரிப் பண்ணைகள் 2010 இலிருந்து முழுமையாக விளைவற்றிருந்தன. விபரங்கள் பின்வருமாறு.

| பண்ணையின் அமைவிடம் | காணியின் பரப்பு (ஏக்கர்கள்) |
|---|---|
| மாமுனை | 78 |
| அறிவியல் நகர் | 07 |
| ஊற்றுப்புலம் | 50 |
| முளங்காவில் | 02 |
| **மொத்தம்** | 137 |

இது தொடர்பில் தலைவர் இவ் காணிகளை பனம் பண்ணைகளாக அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக எனக்கு அறிவித்துள்ளார்.

### 4.2.3 நாட்டப்பட்ட விதைகள் மற்றும் மரக்கன்றுகளின் செயலாற்றல்

விளைச்சல் வீதத்தை அதிகரிக்கும் நோக்கில், பயனுறுதிமிக்க நடுகைக்கான தந்திரோபாய நகர்வொன்றாக 2012 இல் பனங்கன்றுகளை நடுதல் அறிமுகப்படுத்தப்பட்டது. பனங்கன்றுகளை நடுதல் ஆரம்ப கட்டத்தில் 70-75 சதவீத சிறந்த விளைச்சல் வீதத்தை காட்டிய போதும் பனங்கன்றுகள் கால்நடை மற்றும் பன்றிகளால் (கிழங்கிற்காக) இலகுவாக அகற்றப்பட்டிருந்த சில திறந்த தோட்டப் பகுதிகள் இது நீடித்திருக்கவில்லை. இந்த நிலமை திறந்த பகுதித் தோட்டத்தில் 10 சதவீதத்தை விட குறைவான விளைச்சலுக்கு வழிவகுத்த அதேநேரம் மூடிய பகுதிகளில் (நல்ல கவனிப்புடன் வேலியிடப்பட்ட காணிகள்) நாட்டப்பட்ட பனங்கன்றுகள் இறுதிக்கட்டத்திலும் 70 சதவீத விளைச்சல் வீதத்தை காட்டியது. ஆகையால் பனங்கன்று உற்பத்தி கடந்த ஆண்டு குறைவடைந்திருந்ததுடன் சிக்கனமான பயனுறுதிமிக்க நடுகையை மேற்கொள்ளும் நோக்கத்துடன் வேலியிடப்பட்ட காணிக்காக பனங்கன்றுகளும் திறந்த பகுதி (வீதி ஓரங்கள், தரிசு நிலங்கள்) நடுகைக்காக விதைகளும் மாத்திரம் வழங்கப்பட்டன.

எனவே 2016 மார்ச் 11 இல் நடந்த பொது முயற்சிகள் குழுவில் (COPE) மரக்கன்றுகள் நடுதலை நிறுத்தும்படி கட்டளையிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பொது முயற்சிகள் குழு கட்டளைக்கு முரணான வகையில் வேலியிட்ட காணிகளுக்கு மரக்கன்றுகளும் திறந்த வெளிக்கு (வீதி ஓரம் மற்றும் மைதானம்) சிக்கனமற்றதாகவும் பயனுறுதியான மர நடுகை செய்ய விதைகளும் வழங்கப்பட்டிருந்தது.

2014 தொடக்கம் 2016 வரையான ஆண்டுகளின் போது நாட்டப்பட்ட விதைகள் மற்றும் பனங்கன்றுகளின் செயலாற்றல் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

| **வருடங்கள்** | **நாட்டப்பட்ட விதைகளின் எண்ணிக்கை** | **நாட்டப்பட்ட பனங்கன்றுகளின் எண்ணிக்கை** | **மொத்தம்** |
|---|---|---|---|
| 2014 | 382,700 | 25,610 | 408,310 |
| 2015 | 1,183,755 | 4,000 | 1,187,755 |
| 2016 | 170,000 | 4,300 | 174,300 |

### 4.2.4 பனை ஆராய்ச்சி நிலையத்தின் செயற்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட ஆராய்சி செயற்பாடுகளுக்காக ரூபா 65 மில்லியன் செலவு செய்யப்பட்ட போதும் இவ் ஆராய்சி செயற்பாடுகள் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கோ அல்லது பனைசார் தங்கி வாழ்வோருக்கோ நன்மையளிக்கப்படவில்லை.

(ii) நிறுவனமானது தற்போதைய சந்தை வாய்ப்பிலிருந்து உயர்ந்த பட்ச நன்மையினை அடைவதற்கு முறையான ஆராய்சி மூலம் சந்தைக்கு புதிய பனைசார் உற்பத்திப் பொருட்களை அறிமுகப்படுத்த தவறியுள்ளது.

### 4.2.5 கற்பக விற்பனை நிலைய செயற்பாடு

16 கற்பக விற்பனை நிலையங்கங்கள் சரியான கண்காணிப்பு முறைமை மற்றும் தந்திரோபாய சந்தைப்படுத்தல் திட்டம் தயாரிக்கப்படாத விற்பனை நிலைய செயற்பாடுகளினால் மீளாய்வாண்டில் ரூபா 9,978,883 இழப்பு ஏற்பட்டுள்ளது.

### 4.2.6 செயற்திட்ட முடிவுறுத்தலில் கால தாமதம்

புதிய உற்பத்தி நிலைய கட்டிடம் ஒன்று கட்டுமானப்பணிக்காக ஒப்பந்தகாரருக்கு கொடுக்கப்பட்டு ஒப்பந்தத்தின் படி 2017 பெப்ரவரி 28 கட்டி முடிக்கப்பட வேண்டியிருந்தும் மேலும் 2017 யூன் 10 வரைக்கும் 70 சதவீதங்கள் மட்டும் கட்டுமான பணிகள் முடிவுறுத்தப்பட்டது.

### 4.2.7 பனைசார் வாழ்வாதார செயற்பாடுகள்

மீளாய்வாண்டில் பனைசார் வாழ்வாதார செயற்பாடுகளுக்க சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சினால் ரூபா 160 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இதில் ரூபா 80 மில்லியன் மாத்திரம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தினுடாக பயன்படுத்தப்பட்டதுடன் மேலும் மீதியான ஏற்பாடுகள் 2017 ஆகஸ்ட் 31 வரை குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படவில்லை.

### 4.3 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீரவில மாதிரிப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட கைவினைப் பொருட்களுக்காக திஸ்ஸமஹாராமவில் பாரிய கேள்வி இருப்பதால் வீரவில மாதிரிப் பண்ணையின் உற்பத்தி இயலளவை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்தப் பண்ணை அந்தப் பொருட்களை கொழும்பு மற்றும் மட்டக்களப்பிலிருந்து கொள்வனவு செய்திருந்தமையால் உயர்ந்த போக்குவரத்து கிரயத்திற்கு வழிவகுத்திருந்தது.

(ஆ) சந்தைப்படுத்தல் மற்றும் உற்பத்திகள் முகாமையாளர் மற்றும் 51 ஏனைய பதவியணியினர் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வேண்டப்பட்ட தகைமைகள் இல்லாமல் நியமிக்கப்பட்டிருந்தனர். இது தொடர்பாக 2016 மாரச் 11 இல் பொது முயற்சிகள் குழுவால் (கோப்) வழங்கப்பட்ட நெறிப்படுத்தல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உற்பத்திக் கிரயங்களின் அதிகரிப்பு மற்றும் உற்பத்தி நிலையங்களின் மோசமான பராமரிப்பு காரணமாக யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் நிலையங்களில் பனந்தும்பு உற்பத்தி குறைந்து செல்லும் போக்கினை பதிவுசெய்திருந்தது.

(ஈ) பிரதம உள்ளகக் கணக்காய்வாளருக்கு சபையால் பதவி வறிதாக்கல் வழங்கப்பட்டிருந்தது. அவர் சபைக்கு எதிராக சட்ட வழக்கு தொடர்ந்து மீள வேலைக்கமர்த்தப்பட்டிருந்தார். இது தொடர்பில் தொடர்புபட்ட அலுவலர்க்கு சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தமையால் ரூபா 505,231 தொகை அவரின் பதவிவறிதாக்கப்பட்ட 320 நாட்கள் காலப் பகுதியிற்காக அலுவலர்க்கு செலுத்தப்பட்டிருந்தது.

### 4.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

வெற்றிடங்களை நிரந்தரமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 06 நபர்களிடமிருந்து தொடர்ச்சியாக அமைய அடிப்படையில் சேவை பெறப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் ஆரம்ப நிலையிலுள்ள 12 மிகைப் பதவியினருக்காக அங்கிகாரத்தைப் பெறுவதற்கும் மற்றும் ஏற்கனவேயுள்ள 17 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததும் அவதானிக்கப்பட்டது.

### 4.5 வாகனங்களின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நான்கு வாகனங்களின் ஓட்ட அட்டவணைகளில் பிரயாணம் செய்த 976 கிலோமீற்றர்களுக்கான பிரயாணங்களின் நோக்கம் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1,004 கிலோமீற்றர்களுக்காக பிரயாணம் செய்த 09 வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகளில் வாகனங்களைப் பயன்படுத்திய அலுவலர்களின் கையொப்பங்கள் இடப்படடிருக்கவில்லை.

(இ) 1990 ஒக்ரோபர் 19 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் 27 வாகனங்களிற்கான எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை சபையால் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.6 சர்ச்சைக்குரிய விடயங்கள்

யாழ் மாவட்ட செயலகத்தினால் பனைசார் வாழ்வாதார அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியிலிருந்து 20 மடிக் கணனிகள் கொள்வனவுக்காக ரூபா 2,525,000 செலுத்தப்பட்டது. இக் கணனிகள் விநியோகிக்ப்படாததுடன் களஞ்சியத்தில் பயன்படுத்தாதுள்ளது.

### 4.7 முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டு தீர்வு செய்யப்படாத விடயங்கள்

(அ) பனை அபிவிருத்திச் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த கொழும்பு - 04 இல் உள்ள கட்டிடத்தின் உப குத்தகைக்கு விடப்பட்ட பகுதிக்கான மின்சாரம் அதேபோல் தண்ணீர் என்பவற்றிற்கான செலவினங்கள் தொடர்பாக 2016 மாரச் 11 இல் பொது முயற்சிகள் கணக்கு குழுவால் வழங்கப்பட்ட நெறிப்படுத்தல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கட்டிடத்தின் உப குத்தகைக்கு விடப்பட்ட பகுதியின் மேற்படி விலைப்பட்டியல்கள் தனித்தனியாக செலுத்தப்பட்டிருந்ததை உறுதிப்படுத்தும் வகையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஆவணங்களை அனுப்புவதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு கட்டளை இடப்பட்டது.

(ஆ) ரூபா 7,377,318 செலவில் காரைநகரில் உள்ள பல்தொகுப்பு நிலையம் மற்றும் ரூபா 9,000,000 நெடுந்தீவில் உள்ள தும்பு உற்பத்தி நிலையம் 2015 ஆம் ஆண்டு கட்டுமான வேலைகள் பூர்த்தியாகியும் உற்பத்தி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பெறுகைத் திட்டம்

2006 இல் பெறுகை வழிகாட்டியின் 4.2 ஆம் வழிகாட்டி விதிமுறையின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் உள்ளக கணக்காய்வுப் பிரிவுக்கு ரூபா 2,443,879 செலவு செய்யப்பட்டும் உள்ளக கணக்காய்வுப் பிரிவு வினைத்திறனாக தொழிற்படவில்லை.

(ஆ) உள்ளக கணக்காய்வு பிரிவின் வினைத்திறனற்ற தொழிற்பாட்டினால் மீளாய்வாண்டு காலப்பகுதியில் உள்ளகக் கட்டுப்பாட்டில் பல குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளது.

(இ) காலண்டு கணக்காய்வு அறிக்கை மற்றும் கணக்காய்வு ஐயவினா பிரதிகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) ஒவ்வொரு வருடமும் ஆராய்சி செயற்பாடுகளுக்காக பல மில்லியன் செலவு செய்தும் உள்ளக கணக்காய்வு விடய பரப்பில் பனை ஆராய்சி நிலைய செயற்பாடுகள் மற்றும் கட்டுமான வேலைகள் உள்ளடக்கப்படவில்லை.

## 5.3 பாதீட்டு கட்டுப்பாடு

பாதீட்டு கட்டுப்பாடு மீளாய்வாண்டிற்காக பாதிடப்ட்டவற்றிற்கும் உள்ளபடியான வருமானம் செலவினத்திற்கும் இடையில் குறிப்பிடத்தக்களவு 10 வீதத்திலிருந்து 112 வீதமான முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்தவக் கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(அ) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கையின் மூலம் சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் பனை ஆராய்சி நிலையத்தின் ஆராய்சி செயற்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.